சிறுவர் இலக்கியங்களில் பெண்ணிய அணுகுமுறைகளும், சிக்கல்களும்– மரப்பாச்சி சொன்ன ரகசியம் கதையை முன் வைத்து

முனைவர் நீ. குப்புச்சாமி
தமிழ்த்துறைத் தலைவர், இணைப் பேராசிரியர்
டாக்டர் என்ஜிபி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

ப. நாகசெல்வி
244TL002
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை
டாக்டர் என்ஜிபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

ஆய்வுச் சுருக்கம்

சிறுவர் இலக்கியங்கள் குழந்தைகளின் மனம், சமூகப் புரிதல், கற்பனைத் திறன் என்று குழந்தைகளின் உலகத்தை பிரதிபலிப்பன ஆகும். மனித சமூகம் தோன்றிய கற்காலம் தொட்டு இன்றுவரை பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டே வந்துள்ளன. பெண் என்பவள் தன்னை சார்ந்தவர்களுக்கும் சமூகத்திற்கும் உழைக்கும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். வேட்டைச் சமூகம் தொட்டு ஒரு பெண் தன்னுடைய பாதுகாப்பிற்காகவும் பொருளாதார தேவைக்காகவும் ஒரு ஆணைச்சார்ந்து வாழ வேண்டிய நிலை இருந்தது. ஆண், பெண் வேறுபாடு என்பது கருவிலிருந்தே தொடங்கியது எனலாம். பிறக்கபோகும் குழந்தை பெண் என்று அறிந்தும் பிறந்தது பெண் குழந்தை என அறிந்தும் அதனைக் கொல்லும் வழக்கம் முற்காலத்தில் பரவலாக ஒரு சில சமூகத்தில் நடந்தேறியது. பின்பு காலமாற்றத்தின் காரணமாக சமத்துவத்தை நிலைநாட்ட ஒரு குழந்தை வளரும் பருவத்திலிருந்து இத்தகைய பாலின சமத்துவத்தைணீப் புரிந்து செயல்பட வேண்டிய பொறுப்பு உள்ளது. ஆணும் பெண்ணும் சமம் என்ற எண்ணத்தை சிறுவர் இலக்கியங்களின் வழியே கொண்டு சேர்க்க வேண்டும். இவ்விலக்கியங்களே குழந்தைகளின் சிந்தனைச் சூழலுக்கு அடித்தளமாக அமைகிறது.குறிப்பாக பெண் குழந்தைகளின் மன உலகம், உடல் விழிப்புணர்வு, சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பாலினச் சிக்கல் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன என்பது இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகும். இக்கட்டுரை, எஸ். பாலபாரதி எழுதிய மரப்பாச்சி சொன்ன ரகசியம் என்னும் சிறுகதையை முன்வைத்து, சிறுவர் இலக்கியங்களில் பெண் குழந்தையின் அனுபவங்கள், பாலின வேறுபாடு, உடல்-மனம் சார்ந்த விழிப்புணர்வு, குடும்ப கட்டமைப்பு ஆகியவை குறித்து, பெண்ணிய சிக்கல்கள் வழி தீர்வுகளை ஆராய்கிறது.

சிறுவர் இலக்கியம் வரையறையும் வளர்ச்சியும்

சிறுவர் இலக்கியம்சங்க இலக்கியங்களில் குழந்தை மனம் என்ற பொருண்மையில் பதிவு செய்யப்படிருந்தாலும் வளர்ச்சி பெற்றது ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், முதுரை ஆகியவற்றின் வழியேதான் என்பதை கருத இடமுண்டு. பின் வாய்மொழிப் பாடல்கள், தாலாட்டு பாடல்கள் போன்றவை தோற்றம் பெற்றன. 20 ஆம் நூற்றாண்டில் கவிமணி, அழ.வள்ளியப்பா, பூவண்ணன் போன்றோர் சிறார் இலக்கியத்திற்கு பெரும்பங்காற்றினர். இவற்றின் நோக்கம் ஒழுக்க நெறிகளை வளர்ப்பதாக மட்டுமே இருந்தது. மனமகிழ்ச்சியைத் தந்து நற்பண்புகளை குழந்தைகளிடம் வளர்க்க இவ்விலக்கியங்கள் பெரிதும் உதவின.

அதன் பிறகு படிப்படியாக பஞ்ச தந்திர கதைகள், நாட்டுப்புறபாடல்கள், நாடகம், புதினம் போன்றவைகள் தோன்றி வளர்ச்சி பெற்றன. பின் சிறுவர் இதழ்கள் தோற்றம் பெற்று குழந்தைகளின் எண்ண அலைகளை பதிவு செய்தது. வெளிப்படையாகச் சிறிது சிறிதாக பாலின சமத்துவமின்மை நிலவுகிறது என்பதை இலக்கியங்கள் பதிவுசெய்யத் தொடங்கின.

பெண்ணிய அணுகுமுறை கோட்பாடு

பெண்ணியம் என்பது பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு சிந்தனைக் கோட்பாடு ஆகும்.

- சைமன் து போவார் தனது கூடனு second ண்னுது என்ற நூலில் பெண் சமூக கட்டமைப்பின் விளைவு எனக் கூறுகிறார்.
- கேட் மில்லர் தனது Sexual politics என்ற நூலில் குடும்ப அமைப்பு பெண்களை கட்டுபடுத்தும் கருவியாக விளங்குகிறது என வாதிடுகிறார்.

இக்கோட்பாடுகள் சிறுவர் இலக்கியங்களிலும் பிரதிபலிக்கின்றன. எடுத்துக்கட்டாக பெரும்பாலும் கதைகளில் அம்மா வீட்டு வேலைகளை செய்பவராகவும் அப்பா அலுவலகம் செல்பவராகவும் சித்தரிக்கப்பட்டனர். இதைப் படிக்கும் குழந்தைகளுக்கு ஆண் மட்டுமே சமூகத்தில் உயரிய நிலையில் உள்ளவர் என்றும் பெண் வீட்டை மட்டுமே பார்க்கும் அடிமையாளர்கள் என்ற உணர்வு ஏற்படும். மேலும் ஒரு ஆண் குழந்தை அழும் போது ''பெண் குழந்தையைப் போல் அழாதே' என்று சொல்வது பெண் குழந்தைகள் மட்டுமே உணர்வுகளை வெளிப்படுத்துபவர்கள் ஆண் குழந்தைகள் வலித்தாலும் தன்னை உறுதியானவர்களாக காட்டிக்கொள்ள வேண்டும், அதை மீறி அழுதால் பெண்ணை எடுத்துக்காட்டுவது பாலின வேறுபாட்டைக் காட்டுகிறது. உணர்வுகள் இருபாலருக்கும் பொதுவானவை. இதனால் பள்ளிப் பாடத்தில் பாலின சமத்துவம் சார்ந்த பாடங்களை அறிமுகப்படுத்த வேண்டும். பாலின சமத்துவ நிகழ்வுகளை ஊக்குவிக்க வேண்டும். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

மரப்பாச்சி சொன்ன ரகசியம் - பெண்ணிய நோக்கு

மரப்பாச்சி சொன்ன ரகசியம் கதையில் சிறுமிகளின் உளவியல் உலகம், தனிமை உணர்வு, பாலியல் துன்புறுத்தல் பேசப்படுகிறது. இக்கதையில் வரும் ஷாலினி என்ற சிறுமியின் கையில் இருக்கும் மரப்பாச்சி பெண்குரலாக ஒலிக்கிறது. அவளின் தோழி பூஜாவிற்கு வீட்டு உரிமையாளரான தாத்தாவால் நடக்கும் பாலியல் சீண்டலை அறிந்து அதற்கு உதவி செய்கிறது. இங்கே மரப்பாச்சி பல பெண்களின் மனசாட்சியாக அமைகிறது. இது சிறுமியின் உள்ளுணர்வுகளின் பிரதிநிதியாக அமைகிறது. தனக்கு நடந்த இந்த ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்விற்கு தான் மட்டுமே காரணம் என்று சிறுமி நம்பியது குழந்தையின் பயத்தை வெளிக்காட்டுகிறது. அப்பா, அம்மவிடம் சொல்ல மரப்பாச்சி அறிவுறித்திய போதும் அதனால் தன்னை பள்ளிக்கு அனுப்ப மாட்டார்கள் என்று சிறுமி கூறியது சமூகம் எந்தத் தவறு நடந்தாலும் அதற்கான பழியும் தண்டனையும் பெண்ணிடம் தந்து செல்லும் என்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது. ஒரு பெண் குழந்தை தனக்கு நடக்கும் அநீதியைக் கூட வெளியே சொல்ல முடியாத சூழல் ஏற்படுகிறது. இந்த மன உளைச்சல் காரணமாகவே பல குழந்தைகள் தற்கொலைக்குத் தள்ளப்படுகின்றனர். கதாசிரியர் சிறு குழந்தைகள் இக்கதையை படித்து தனக்கு நடக்கும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் சித்தரித்துள்ளார். மேலும் அப்படி வெளிக் கொண்டு வரும் போது அதற்கான சரியான தீர்வு கிடைக்கும் என்பதையும் இக்கதை வழியே வெளிப்படுத்துகிறார்.

கதையில் வெளிப்படும் பெண்ணிய அம்சங்கள்

பாலின வேறுபாடு

தன் பெற்றோரிடம் தனக்கு நடந்த நிகழ்வினை கூறத் தயங்கிய நிலலையில் குடும்பத்தில் ஆண் குழந்தைக்கு கிடைக்கும் பேச்சு சுதந்திரம் பெண்குழந்தைக்கு கிடைப்பதில்லை என்பதைக் காட்டுகிறது.

உளவியல்

பெண் குழந்தையின் மனநிலை, பயம், குற்ற உணர்வு அதனால் தன்னைத் தானே தனிமைப்படுத்துதல் ஆகியவை முக்கிய உளவியல் பிரச்சனையாக பேசப்படுகிறது

குரலற்ற பெண்

சிறுமி தனக்கு நடந்த அநீதிக்கு நேரடியாக எதிர்ப்பு தெரிவிக்காமல் மரப்பாச்சி வழியே தீர்வு காண முயல்வது பெண்குரலின் ஒடுக்கப்பட்ட தன்மையைக் கூறுகிறது.

ஆணாதிக்கம்

தனதுபேத்தி வயது குழந்தையிடம் பாலியல் ரீதியான துன்புறுத்தலில் ஈடுபட்ட தாத்தாவின் கொடூர புத்தியும் ஆணாதிக்க மனப்பாங்கும் வெளிப்படுகிறது.

இயலாமை

மறைமுகமாக இங்கே தாத்தாவின் மனைவியாக வரும் பாட்டியும் பாதிக்கப்படுகிறாள். இது ஒரு பெண் மனைவியாக அவளின் இயலாமையைக் காட்டுகிறது.

சிக்கல்களும் தீர்வுகளும்

- *பாரம்பரியக் கட்டுப்பாடுகள் - பெண் குழந்தைக்கு விதிக்கப்படும் ஒழுக்கநெறிகள்*
- *பயமூட்டும் வளர்ப்பு முறை - கட்டுப்பாடு மற்றும் மிரட்டல் வழி வளர்ப்பு.*
- *பாலின சிந்தனை ஊட்டம் - பெண் குழந்தை அமைதியாக இருக்க வேண்டும் என்ற கருத்து.*
- *உளவியல் ஒடுக்குமுறை - மன உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நிலை.*
- *எதிர்ப்பு தெரிவிக்காமை - தனக்கு பிடிக்காத ஒன்று நடந்தால் அதனை எதிர்க்கப் பயப்படுதல்.*

போன்றவை இக்கதை வழி பெண் குழந்தைகளின் சிக்கலாக உள்ளது. இதற்கான தீர்வுகளாக,

- *சிறுவர் இலக்கியங்களில் செயற்பாட்டாளராக பெண் கதாபாத்திரங்களை உருவாக்குதல்.*
- *பாலின சமத்துவக் கருத்துகளை குழந்தை மனநிலைக்கு ஏற்ற வகையில் வெளிப்படுத்துதல்.*
- *கல்வி பாடத்திட்டங்களில் பெண்ணிய உணர்வு கொண்ட கதைகளை இணைத்தல்.*
- *குடும்பச் சூழலில் உரையாடல் கலாச்சாரத்தை ஊக்குவித்தல்.*
- *ஆணும் பெண்ணும் சமம் என்று பெண் குழந்தைகளிடம் மட்டுமல்லாமல்ல ஆண் குழந்தைகளிடமும் சொல்லி வளர்த்தல்.*
- *பாலியல் குற்றவாளிகளை கருவிலே கண்டறிந்து மரபியல் ரீதியான திருத்தங்களுக்கான மருந்துகளை கண்டுபிடித்தல்*

முடிவுரை

மேற்கண்ட செய்திகளின் வழி மரப்பாச்சி சொன்ன ரகசியம் போன்ற சிறுவர் கதைகள் பெண் குழந்தைகளின் உளவியல் அனுபவங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் வெளிக்கொணர்கின்றன. சிறுவர் இலக்கியம் என்பது வெறும் பொழுது போக்கு கருவி அல்ல. அது சமூகத்தை வடிவமைக்கும் கருவியாக அமைகிறது. பெண்ணிய அணுகுமுறைகள் மூலம் இத்தகைய கதைகளை வாசிப்பது சமத்துவமான சமூக நோக்கை வலுப்படுத்துகிறது. இவ்வாய்வு மரப்பாச்சி சொன்ன ரகசியம் என்ற படைப்பை

மையமாகக் கொண்டு சிறுவர் இலக்கியங்களில் பெண்ணிய அணுகுமுறைகள் எவ்வாறு வெளிபடுகின்றன என்பததைக் கவனமாக ஆராய்ந்துள்ளது. மேலும் உளவியல் உண்மைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறுவர் இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள் வலுப்படுகின்றன. சிறுவர் இலக்கியங்கள் இனிவரும் காலங்களில் சமூக கட்டமைப்பைக் காட்டும் பிம்பமாக செயல்படும் நிலை வளர குடும்ப ரீதியான பயிற்சிகள் மனவளக்கலையுடன் கூடிய உளவியல் சார்ந்த கருத்துகளை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

துணைநூல் பட்டியல்

1. மரப்பாச்சி சொன்ன ரகசியம்மூன்றாம் பதிப்பு 2024 பாரதி புத்தகாலயம் சென்னை
2. Simone de Beauvoir, The Second Sex, London, The Vintage Pulications 1949
3. Kate Millett. Sexual Politics. New York: Doubleday, 1970.
4. கு.முருகேசன். சிறுவர்இலக்கியவரலாறு சென்னை: நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் 2014.
5. சு.வெங்கடேசன். பெண்ணிய சிந்தனைகள் மதுரை: கலைஞர்பதிப்பகம் 2016.